**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**O.S. No. 130 / 2024**

**<u>பி.வா.சா.2 / சிவசாமி /02.12.2025</u>**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க யார் அழைத்தார்கள் என்றால் 2ம் பிரதிவாதி மகேஷ்பாபு அழைத்தார். என் வீடு அவினாசி சார் பதிவாளர் அலுவலத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். ஆவண எழுத்தர் சோமசுந்தரம் அலுவலகமும் என் வீட்டிற்கு அருகில் தான் உள்ளது என்றால் சரிதான். பழனிசாமியை உயில் எழுதுவதற்கு முன்பு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 7, 8 வருடங்களாக தெரியும். பழனிசாமியின் பூர்விக ஊர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பழனிசாமியின் வீடு தாவா சொத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் அங்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். பழனிசாமியின் மூன்று மகள்களின் திருமணத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றால் அவர் எனக்கு அறிமுகமாவதற்கு முன்பே நடந்துவிட்டது. பழனிசாமியின் மூன்று மருமகன்கள் என்ன தொழில் செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ஒருவர் காலமாகிவிட்டார், இளைய மருமகன் ஒர்க்ஷாப் வைத்துள்ளார், மூத்த மருமகன் புதுபாளையத்தில் தறிகுடோன் வைத்துள்ளதாக கேள்விப்பட்டேன். எனது பிரமாணவாக்குமூலம் எங்கு வைத்து எந்த தேதியில் தயாரிக்கப்பட்டது என்றால் கோயம்புத்தூரில் உள்ள கதிர்வேல் என்ற வழக்கறிஞர் தயாரித்து கொடுத்தார். வா.சா.ஆ.7 உயில் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 2017ம் வருடம் எழுதப்பட்டது மாதம், தேதி ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.7 முழுவதும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது இடைசொறுகலாக பேனாவினால் எழுதப்பட்டதா என்றால் முழுவதும் கணினியில் தான் தட்டச்சு செய்யப்பட்டது. ஆனால், வா.சா.ஆ.7 உயிலின் இரண்டாவது பக்கத்தில் பேனாவால் கைப்பட எழுதியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இடைசொறுகலாக கைப்பட எழுதிய இடத்தின் அருகில் பழனிசாமி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 உயில் எழுதிய தேதிக்கு எத்தனை நாட்களுக்கு முன்பு பழனிசாமியை நான் சந்தித்தேன் என்றால் சுமார் 4 நாட்கள் இருக்கும். வா.சா.ஆ.7 உயில் தயாரிக்க பழனிசாமியுடன் 2ம் பிரதிவாதியான மகேஷ்பாபு உடனிருந்தாரா என்றால் அவர் வரவில்லை அவரது இளைய மருமகனான முருகேசன் தான் வந்தார். பழனிசாமியும், முருகேசனும் என்னை சந்தித்த பிறகு தான் பத்திர பதிவு

அலுவலகத்திற்கு சென்றார்களா என்றால் இல்லை. பழனிசாமி வர சொல்லி கேட்டு அலைபேசியில் தகவல் சொல்லி நான் பத்திர எழுத்தர் சோமசுந்தரம் அலுவலகத்திற்கு போனேன். நான் பத்திர அலுவலகத்திற்கு சென்றவுடன் உயிலில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. உயிலை பத்திர எழுத்தர் சோமசுந்தரம் படித்து காண்பித்தார். முதலில் பழனிசாமி கையொப்பம் செய்தார், பின்னர் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். எனக்கு பின் அவரது மருமகன் சாட்சி கையொப்பம் செய்தார். வா.சா.ஆ.7 உயிலில் உள்ள வாசகங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் பழனிசாமி சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. வா.சா.ஆ.7 உயில் எழுதுவதற்கு முன்பு பழனிசாமி மற்றும் வாதிகளான அவரது மூன்று மகள்களும் சேர்ந்து பழனிசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் ஒரு பங்கை கிரயம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் பழனிசாமி சொன்னார். ஆனால், எப்போது அவ்வாறு கிரயம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 உயில் எழுதிய பிறகு பழனிசாமி எந்த தேதியில் காலமானார் என்று எனக்கு தெரியுமா என்றால் 4, 5 வருடங்களுக்கு பிறகு காலமானார். தேதி சரியாக ஞாபகம் இல்லை. பழனிசாமியின் இறுதிசடங்கில் நான் கலந்து கொண்டேனா என்றால் ஆமாம். பழனிசாமி காலமான பிறகு பழனிசாமியின் மனைவி, மகன் மற்றும் மகள்களுடன் நான் தொடர்பில் தான் உள்ளேனா என்றால் இல்லை. பத்திர எழுத்தர் சோமசுந்தரத்தின் அலுவலகத்தை என்னுடைய கட்டிடத்தின் ஒரு பகுதியை தான் வாடகைக்கு விட்டுள்ளேன். வா.சா.ஆ.7 கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட பிறகு நான் அதை படித்து பார்த்தேனா என்றால் இல்லை படித்து காண்பித்தார்கள். வா.சா.ஆ.7 உயில் 27.06.2017 தேதியிட்டு தயாரிக்கப்பட்டு அது பின்னர் 26.06.2017 தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தேதி மாறிவிட்டது என்று உயில் பதிவு செய்த மறுநாள் எனக்கு தெரியவந்தது. அது ஒரு பிரச்சனை இல்லை என்று ஆவண எழுத்தர் சோமசுந்தரம் சொன்னார். வா.சா.ஆ.7 ல் பிழை ஏற்பட்டுள்ளது என்று பிழை திருத்த பத்திரம் ஏற்படுத்தினார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் வா.சா.ஆ.7 உயில் சாசனத்தில் உள்ள விவரங்களை பழனிசாமியோ, நானோ, மற்றொரு சாட்சி முருகேசனோ படித்து பார்க்காத காரணத்தினால் தான் தேதி தவறாக தட்டச்சு செய்யப்பட்ட விவரம் தெரியாமல் போனது என்று சொன்னால் சரியல்ல. உயிலை படித்து காண்பிக்கும் போது தேதி சொல்லவில்லை. வா.சா.ஆ.7 உயில்

பழனிசாமிக்கு தெரியாமல் தயாரிக்கப்பட்டதால் பத்திர எழுத்தர் சோமசுந்தரம் என்னுடைய கட்டிடத்தில் வாடகைக்கு அலுவலகம் வைத்திருக்கும் காரணத்தினால் கட்டிட உரிமையாளர் என்ற முறையில் பத்திர எழுத்தர் சோமசுந்தரத்தின் கையிருப்பு சாட்சியாக அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பழனிசாமி காலமான பின்பு வா.சா.ஆ.7 உயிலை அவரது உறவினர்களுக்கோ அருகில் உள்ள நில உரிமையாளர்களுக்கோ அவரது நண்பர்களுக்கோ பிரகடனப்படுத்தவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பழனிசாமி காலமான பின்பு வா.சா.ஆ.7 உயிலை பயன்படுத்தி பழனிசாமியின் மகன் மகேஷ்பாபு பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 பழனிசாமியின் விருப்பத்தின் பேரில் தயாரிக்கப்படவில்லை என்றும் பழனிசாமியின் மகன் மகேஷ்பாபு மற்றும் மாரியம்மாள் ஆகியோரின் விருப்பத்தின் பேரில் ஏற்படுத்தப்பட்டதால் பட்டா மாறுதல் செய்யப்படவில்லை என்றால் பழனிசாமியின் விருப்பத்தின் பேரில் தான் எழுதப்பட்டது. நான் பழனிசாமியின் நண்பர் என்பதை காண்பிக்க ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. எனது சாட்சியத்தில் உண்மைத்தன்மை இல்லை என்றும் கோவை வழக்கறிஞர் தயாரித்து கொடுத்த முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.12.02 20:54:18 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.